12. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அஈ) தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்). 2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2009), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2009)[@] ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன். (குறுக்கீடு)

திருமதி பதர் சயீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொஞ்சம் பொறுங்கள், (குறுக்கீடு) முதலில் திரு. எச். அப்துல் பாசித் அவர்கள் பேசட்டும். (குறுக்கீடு)

திரு. எச். அப்துல் பாசித்: இல்லை, இல்லை இந்த அடையாளம் என்னிடம் இருக்கிறது. அதற்காக பேசுகிறேன் என்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை நிறைவேற்றும் நோக்கத்தில்...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். அப்துல் பாசித் மற்றும், திரு. ம.அ. கலீலுர் ரஹ்மான் கொடுத்துள்ள திருத்தங்கள் முன்மொழியப் பெறவில்லை. அத்திருத்தங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகின்றன. (குறுக்கீடு) திரு. எச். அப்துல் பாசித், பேசுங்கள்.

திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணையை நிறைவேற்றும் நோக்கத்தில் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இதுவரை, தனியார் (இனமுறை) சட்டத்திற்கு ஏற்ப அந்தந்த மத அல்லது சாதி அல்லது

@ 30–6–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

குழுவினர் பழக்கத்திற்கு ஏற்ப திருமணங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மனித உறவுகளைப் புனிதப்படுத்தும் முறையிலே திருமணங்கள் இதுவரை அமைந்திருக்கின்றன. அவற்றைப் பதிவு செய்வது இதுவரை அரசாங்கத்தால் கட்டாயமாக்கப்படவில்லை. ஆனால் இப்போதுதான், இந்தச் சட்டத்தின் மூலம்தான், திருமணங்களைப் பதிவு செய்வதைக் கட்டாயமாக்கும் முதல் முயற்சியை அரசு தொடங்கியிருக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டுவரும்போது இந்தச் சட்டம் பல்வேறு வகுப்பினர்களின் தனியார் சட்டங்களில் தலையிடுவதாக இருக்குமோ என்ற சந்தேகம் உடனே வந்துவிடுகிறது. ஆனால், இந்தச் சட்டத்தை உன்னிப்பாகப் படித்துப் பார்க்கும்போது, இந்தச் சட்டம் தனியார் சட்டத்தை முழுமையாக நிலைநிறுத்தும் வகையில் அமைந்திருக்கிறது.

பிற்பகல் 2–35

தனியார் சட்டப்படி ஒவ்வொரு சமூகத்தோடும் திருமணம் செய்வதை இச்சட்டம் அங்கீகரிப்பதோடு அதற்குப் பாதுகாப்பும் தந்திருக்கிறது. தனியார் சட்டப்படி நடக்கும் திருமணத்தை அப்படியே அரசு பதிவு செய்துகொள்ளும் என்று இந்தச் சட்டத்தில் பிரிவு 7 (1) (a) மற்றும் பிரிவு 22–ல் உத்தரவாதம் தரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டத்தை எல்லாவகையிலும் முழுமை பெற்றதாக்கவும், அனைவருடைய பாராட்டுதல்களைப் பெறக்கூடியதாகவும் அமைக்கும்வகையில், பிரிவு 2 (e)–ல், Kazi Act–ஐயும் இணைத்திட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தில் ஏற்படும் இடைஞ்சல்களுக்குத் தீர்வு காண இரண்டு ஆண்டு கால அவகாசம் அரசாங்கத்தின் சார்பாக தரப்பட்டிருப்பதை நினைவுகூர்ந்து, திருமணங்களைப் பதிவு செய்வது தொடர்பாக கருத்துகளை அறிந்துகொள்ள மத்திய அரசு, இஸ்லாமிய தனியார் சட்ட வாரியத்திடமும், கிறித்துவ, ஜைன மற்றும் சீக்கியர்களின் தனியார் சட்ட வாரியங்களிடமும் கருத்து கேட்டிருக்கிறது. இது தொடர்பாக இஸ்லாமிய தனியார் சட்ட வாரியத்தின் கூட்டம் விரைவில் நடைபெறவிருக்கிறது. இஸ்லாமிய தனியார் சட்ட வாரியம் திருமணங்களைக் கட்டாயப் பதிவு செய்வது குறித்து சில கருத்துகளைப் பரிந்துரை செய்யுமானால் அந்தப் பரிந்துரைகளையும் இந்தச் சட்டத்தில் இணைத்துக்கொள்ளும் வகையில் வழிவகை செய்ய வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இதன்மூலம், இஸ்லாமிய தனியார் சட்டத்திற்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாது என்ற உத்தரவாதத்தை அரசு தருகிறது என்ற நம்பிக்கை, தமிழகத்தில் உள்ள இஸ்லாமியர்கள் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் உள்ள இஸ்லாமியர்களிடத்திலே பிறக்கும். எனவே, இஸ்லாமிய தனியார் சட்ட வாரியத்தின் பரிந்துரைகளை கவனத்தில் எடுத்துக்கொள்ளும்படி அன்புடன் கேட்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பதர் சயீத்.

TMT. BADER SAYEED: Mr. Speaker Sir, this Bill, I believe, is highly bureaucratic and very cumbersome. I suggest to the Hon.ble Minister, that this Bill be sent to a Select Committee, because this will have very far-reaching effects on women. After all, the Supreme Court has directed that every State should introduce this Bill, only to help women. As you know, marriages that are not registered pose a great problem and several sections of this Bill, I must say, are . . . (Interruption) Let me finish. (Interruption)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. அப்துல் பாசித், அவர்களுக்கு அமைச்சர்தான் பதில் சொல்ல வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள், (குறுக்கீடு) No, no. You are not the competent person to answer the questions.

TMT. BADER SAYEED: I do not believe that the minorities need to be afraid at all about this Bill. After all, it is only to safeguard the rights of the women, irrespective of any religion or caste. Each section needs to be very elaborately discussed, because there are many sections here like Section 7, which insists that the Registrar has to be convinced whether the marriage is performed according to the personal laws of the parties. I think we are giving too much of importance and too many rights here to the Registrar, which really need not be given. I may tell the Hon'ble Minister that Section 11 insists that any person, on payment of fee, can ask for a search of records for any entry in the register of marriages. I am sure you know that this is what is happening in Gujarat; you never know what can happen in Tamil Nadu. Therefore, I request the Hon'ble Minister that this Bill be sent to a Select Committee so that more women's organizations can study it and come back, there can be a broad consensus and then you may place it back before the Assembly.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமணங்களைக் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும் என்கிற இந்தச் சட்டத்தை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் வரவேற்கிறேன். ஆனால், வாணியம்பாடி சட்டப் பேரவை உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, இந்தச் சட்டத்தால் இஸ்லாமிய personal law–க்கு எந்த வகையிலும் இடையூறு வந்துவிடக்கூடாது என்கிற ஒரு அச்சம் இஸ்லாமிய மக்கள் மத்தியில் இருந்துகொண்டிருக்கிறது. அதற்கு அரசு ஒரு நல்ல ஏற்பாட்டினைச் செய்து, அவர்களுடைய அந்த மத உணர்வுக்கு எந்தவிதமான குந்தகத்தையும் விளைவிக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டும், ஏற்கெனவே அவர்கள் ஜமாத்தில் திருமணத்தைப் பதிவு செய்கிறார்கள். அதேபோல் கிறிஸ்துவர்கள் திருமணத்தை சர்ச்சில் பதிவு செய்கிறார்கள். அந்தப் பதிவை நாம் ஏற்றுக்கொள்ளப் போகிறோமா இல்லையா என்பதையும் அரசு விளக்க வேண்டும். இது ஒன்று.

பிற்பகல் 2–40

இரண்டாவது, கட்டாயப் பதிவு என்று சொல்கிறீர்கள். இந்தப் பதிவைச் செய்யத் தவறி விட்டவர்களுக்கு என்ன தண்டனை நாம் கொடுக்கப் போகிறோம் என்பதைப் பற்றி முழுமையான விளக்கம் இதிலே இல்லை. சொல்லப்போனால் அந்த Penalty Section-ஐப் பார்க்கிறபோது "Any person secreting, destroying or dishonestly or fraudulently altering the register of marriage or any part thereof shall, on conviction, be punished with imprisonment for a term which may extend to two years or with fine which may extend to ten thousand rupees or with both" என்றுதான் இருக்கிறதேயொழிய திருமணத்தைப் பதிவு செய்யத் தவறினால் அவர்களுக்கு என்ன தண்டனை என்று குறிப்பிடப்படவில்லை. அப்படித் தவறும்பட்சத்தில், is the offence bailable or non-bailable, cognizable or non-cognizable? இதில் யார், எப்படி நடவடிக்கை எடுப்பார்கள் என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்கு விளக்க வேண்டுமென்பதைக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வந்தது. Seema Vs. Ashwani Kumar என்ற ஒரு வழக்கில் ஒரு தீர்ப்புச் சொன்னார்கள்; "We are of the view that marriages of all persons who are citizens of India belonging to various religions should be made compulsorily registerable in the respective States, where the marriage is solemnized." என்பதுதான் அந்தத் தீர்ப்பு. அந்தத் தீர்ப்பை ஏன் சொன்னோம் என்பதற்கு சுப்ரீம் கோர்ட் சொல்கிறது, "The effect of non-registration would be that the presumption which is available from registration of marriage, would be denied to a person whose marriage is not registered." அதாவது பதிவு செய்தவர்களுக்குக் கிடைக்கின்ற நன்மைகள் பல, திருமணங்களைப் பதிவு செய்யாதவர்களுக்குக் கிடைக்காமல் போய் விடுகின்றன. ஆகையினால், உடனடியாக மத்திய அரசு ஒரு Comprehensive Act–ஐ கொண்டு வரலாம். அது இல்லாவிட்டாலும், முதலிலே மாநிலங்கள் சட்டங்களை இயற்றிக் கொண்டுவரலாம் என்று சொல்லிவிட்டு, இருக்கிற சட்டங்கள், என்னென்ன சட்டங்கள் இருந்தாலும் அவற்றோடு இதனை பொருத்திச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையில் உடனடியாக நாம் என்ன செய்தோம் என்று கேட்டால், அதை ஏற்றுக்கொண்டு, as per the decision of the Supreme Court of India, this Government amended provisions of Tamil Nadu Hindu Marriage Registration Rules, 1967 subsequently and published it in the Gazette on 27th October 2007. Hindu Marriage Act–ன்கீழ் இருக்கிற விதிகளிலே இந்தத் திருத்தத்தை நாம் செய்து விட்டோம். ஆக, இந்து திருமணச் சட்டத்திலேயே, பதிவு செய்ய வேண்டுமென்று சொல்லிவிட்டோம். ஆனால், மற்ற மதத்தவர்கள் இருக்கிறார்கள் இல்லையா? அவர்களுக்காக என்ன செய்ய வேண்டுமென்பதற்காகத்தான், மத்திய அரசில் மற்றவர்களுக்கு எப்படிச் செய்கிறார்கள், மற்ற மதத்தினருக்கு எப்படி இணைக்கிறார்கள் என்று நாம் கொஞ்சம் பொறுத்துப் பார்க்க நினைத்தோம். ஏனென்றால் நாம் மட்டும் செய்ய வேண்டாம்; Central Government-லே ஒரு Comprehensive Act கொண்டு வரப்பட இருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு பார்க்கலாம் என்று நினைத்தோம். மாண்புமிகு முதலமைச்சர்கூட அந்தக் குறிப்பிலே அப்படித்தான் எழுதினார்; மத்திய சட்டம் வரட்டும் என்று எழுதினார். ஆனால், அது வரவில்லை. அதற்கு இடையிலே சுப்ரீம் கோர்ட்டிலே திரும்பத் திரும்பத் நம்மை affidavit தாக்கல் செய்யச் சொல்லிக்கொண்டே இருந்தார்கள். Affidavit தாக்கல் செய்த பிறகு என்ன சொன்னார்கள் என்றால், "From the affidavit of the State of Tamil Nadu, it appears that there

is some misconception that the rules relating to registration of marriage of religions other than Hinduism had to be enacted by the Central Government." அங்கு இயற்றவில்லை. "It is really not so. Let necessary steps be taken by the State Government within a period of six weeks to do the needful." என்று ஒரு ஆணையை நமக்குக் கொடுத்தார்கள். அதன் அடிப்படையில்தான் நீதிமன்ற ஆணையில் யாராக இருந்தாலும், எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், எத்தகைய திருமண முறைகளைக் கையாண்டாலும் அவர்கள் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்கிறார்கள். கிறித்துவர்கள் மாதா கோயிலிலே திருமணத்தை நடத்துகிறார்கள். அதைப் பதிவு செய்ய வேண்டுமென்கிறார்கள். நம்முடைய இஸ்லாமியப் பெருமக்கள் அவர்களுக்குரிய ஒரு சடங்கை Kazi-க்களை வைத்து நடத்துகிறார்கள். நடத்தினாலும் பரவாயில்லை. அவர்களும் ஒரு கையெழுத்து போட்டு, அங்கே அதைப் பதிவு செய்ய வேண்டுமென்றுதான் கேட்கிறார்கள். ஆகவே, அதைத்தான் ரொம்ப அழகாக judgement-லே "marriages of all persons who are citizens of India belonging to various religions should be made compulsorily registerable in the respective States, where the marriage is solemnized." என்று அழகான வார்த்தைகளாலே குறிப்பிட்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–45

பிரிவு 2(e)-ல் "Priest" என்று போட்டிருக்கிறார்கள், அதிலே "Kazi" என்று இல்லை என்று திரு. எச். அப்துல் பாசித் குறிப்பிட்டார். "Priest" என்று போட்டாலே அவர்களும் சாட்சியாக வரலாம். ஆகையினாலே, இஸ்லாமியர்களுக்கு "Kazi" என்று போட்டால் அப்புறம் கிறித்துவர்களுக்கு "Father" என்று போடவேண்டும். இன்னொரு மதத்தவருக்கு வேறு மாதிரிப் போடவேண்டும். ஆகையினாலேதான் அந்த Section 2(c)-ல் நாங்கள் இதைப் போடும்போது மிகவும் தெளிவாகப் போட்டோம். சட்டமுன்வடிவிலே வருவது, ' "marriage" includes all marriages performed by persons belonging to any caste or religion under any law for the time being in force, or as per any custom or usage in any form or manner and also includes remarriage.' ஆக, எந்தவிதமான திருமணமாக இருந்தாலும், எந்தவிதமான ஐதீக வழியில் செய்திருந்தாலும், எந்த ஜாதிகளாக இருந்தாலும் திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று நீதிமன்றத்தில் சொல்லப்பட்டது. அதிலே ஒன்றும் பெரிய தவறு இல்லை.

இரண்டாவதாக, பெண்களுக்கு இது மிகவும் பாதகமாக அமைந்துவிடுமோ என்று தோன்றுகிறது என்று திருமதி பதர் சயீத் அவர்கள் சொன்னார்கள். பெண்களுக்குத்தான் இதில் நல்ல பாதுகாப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏன் என்றால், அவனவன் ஏமாற்றிவிட்டுப் போய்விடுகிறான். இப்போதுகூட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் சொன்னார்கள், ஆஸ்திரேலியாவிலே ஒருவன் கல்யாணம் பண்ணி, இங்கே கொண்டுவந்து விட்டுவிட்டுப் போய்விட்டான் என்று. யார், என்ன என்று சொல்லவில்லை. அதுபோன்ற நிகழ்வுகளைத் தடுக்கத்தான் இச்சட்டம். சில பேர்களுக்குப் பதிவு செய்யாததால் குழந்தைகளுக்குப் பள்ளிகளிலே இடம் கிடைக்கமாட்டேன் என்கிறது. திருமணங்கள் கட்டாயமாகப் பதிவு செய்யப்பட வேண்டுமென்ற நிலை இருந்தால் அங்கொன்றும், இங்கொன்றுமாக நாட்டில் சில இடங்களில் நடைபெறும் குழந்தைத் திருமணங்களைக்கூடத் தடுக்கலாம். பிறப்பு மற்றும் இறப்புப் பற்றிய விவரங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிலை உள்ளதால் அதற்கான புள்ளிவிவரங்களை நாம் அறிய முடிகிறது. அதுபோல் திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்ற நிலை வந்தால், நாட்டில் திருமணங்கள் குறித்த புள்ளிவிவரங்கள் கிடைக்கும். அதுமட்டுமல்ல. மேலும், திருமணங்கள் கட்டாயப் பதிவு செய்யப்படும் நிலை உருவாக்கப்பட்டால் குழந்தைத் திருமணங்கள் தடுக்கப்படுவது மட்டுமேயன்றி, குறைந்தபட்சத் திருமண வயதையும் இது உறுதிப்படுத்துகிறது. மணமகள் மற்றும் மணமகனின் விருப்பின்றி நடத்தப்படும் திருமணங்களைக்கூட, தடுத்து நிறுத்திவிடலாம். சட்டத்திற்குப் புறம்பாக நடத்தப்படும் இருதார மற்றும் பலதாரத் திருமணங்களைத் தடுத்து நிறுத்தலாம். திருமணப் பதிவு செய்யப்பட்ட பெண், மணமகனின் இல்லத்தில் வாழ உரிமை கோரலாம் மற்றும் பராமரிப்புத் தொகை, maintenance தொகைகூடக் கேட்கலாம். விதவைகள் தங்களின் கணவன் இறந்த பிறகு, அந்த மரபு உரிமையையும், சிறப்பு உரிமையையும், இதர உரிமைகளையும் பெற முடியும். திருமணத்திற்குப் பிறகு பெண்களைக் கைவிட நினைக்கும் கணவன்மார்கள் இந்தச் சட்டத்தால் அச்சப்படுவார்கள். திருமணம் என்ற போர்வையில் மகளிரையும் குழந்தைகளையும் வெளிநாட்டிலுள்ள நபர்களுக்கு விற்பனை செய்யும் பெற்றோர் மற்றும் காப்பாளர்கள் இச்சட்டத்தால் அச்சமடைவார்கள். திருமணங்கள் தொடர்பான பதிவுருக்கள் பராமரிக்கப்படுமானால், இருபாலருக்குத் திருமணங்கள் நடைபெறுவது தொடர்பான சச்சரவுகள் பெருமளவு தவிர்க்கப்படும். திருமணங்கள் பதிவு

செய்யப்படாவிட்டால் பெண்கள் மிகப் பெருமளவில் பாதிக்கப்படுகின்றனர். திருமணம் பதிவு செய்யப்பட்டால் திருமணம் நடைபெற்றதற்கான சாட்சியாக அப்பதிவுருக்கள் விளங்கும். மேலும், திருமணம் நடைபெறவில்லை என்ற சச்சரவில் இப்பதிவு, திருமணம் நடைபெற்றது என்பதை உறுதிப்படுத்தும். ஏற்கெனவே நான் சொன்னபடி, குழந்தைத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தும். இப்படி பல நன்மைகள் பெண்களுக்கும், குழந்தைகளுக்கும் இருக்கிற காரணத்தால் இந்த மசோதாவை மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திருமதி பதர் சயீத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

திரு. எச். அப்துல் பாசித்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. ஞானசேகரன், அந்த மைக்கின் பட்டனை ரொம்ப அழுத்தாதீர்கள். கையை எடுங்கள். திரு. சி. ஞானசேகரன் சொல்லுங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கேள்விக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமளித்தார்கள். இது கட்டாயப் பதிவு என்று சொல்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மைக் வேலை செய்கிறது. திரும்பவும் அதை ஏன் அழுத்துகிறீர்கள்?

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டாயப் பதிவு என்று சொல்கிறபோது இதைப் பதிவு செய்யத் தவறுகிறவர்களுக்கு என்ன தண்டனை இந்தச் சட்டத்தில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதை விளக்க வேண்டும். "Priest" என்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது ஓர் விளக்கத்தைக் கொடுத்தார்கள். ஆனால், Definition–லே பார்த்தீர்கள் என்றால் section 2(e)–இலே பார்த்தீர்கள் என்றால் ' "priest" means any person who performs a marriage or any person present in the marriage referred to in section 7-A of the Hindu Marriage Act, 1955' என்றுதான் இருக்கிறது. இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

இதனாலே குழந்தைத் திருமணத்தையெல்லாம் தடுக்கலாம் என்று சொல்கிறார்கள். திருமணம் முடிந்த பின்னால் 90 நாட்களுக்குள் இதைப் பதிவு செய்ய வேண்டுமென்றுதான் இருக்கிறதேயொழிய, திருமணத்திற்கு முன்னே அதைத் தடை செய்யக்கூடிய அளவிலே இந்தச் சட்டம் இல்லை என்பதையும் நான் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுதான் முதலிலே ' "Priest" means any person who performs a marriage' அதுவரையிலும்தான் மற்றவர்களுக்கு. அடுத்து வரும் "any person present in the marriage referred to in section 7-A." என்பதைப் பொறுத்தவரை, Hindu Marriage Act–ல் இருப்பது அவருக்குத் தெரியும். ஆகையினாலேதான் "any person" என்று போட்டு இவர்களுக்கும் போட்டுவிட்டோம். மூன்றாவதாக இன்னொன்றையும் கேட்டார் அவர்.

பிற்பகல் 2–50

எந்தச் சட்டத்திலும், சட்டத்தில் எல்லாமே இருந்துவிடாது. அதனால்தான், கடைசியில் அவர்கூட கேட்டார், கூடுதலாக சிலவற்றைப் போடலாமா என்று கேட்டார்? அதுதான் இந்தச் சட்டத்தின் பிரிவு 21–ல், "The Government may, from time to time, issue such directions not inconsistent with the provisions of this Act, to the Registrar, District Registrar and to the Registrar-General, as it may think fit for the effective implementation of the provisions of this Act and they shall comply with such direction" என்றும் பிரிவு 22–ல் "The provisions of this Act shall be in addition to, and not in derogation of, any other law for the time being in force" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தந்த நேரத்தில் என்னென்ன வருகின்றதோ அதையெல்லாம் சேர்க்கும் அளவுக்குப் போட்டிருக்கிறோம். அதனால்தான் இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கின்றோம் நாம். ஏனென்றால், அதற்குமேல் கொடுத்தால், சட்டமன்றத்தினுடைய உரிமையை, prerogative–ஐ நிருவாகம் எடுத்துக்கொள்ளும். அதனால்தான், இரண்டு வருட கால அவகாசம் கொடுக்கின்றோம். ஏதேனும், சட்ட நிருவாகத்தில் பிரச்சினைகள் வந்தால், அதைத் திருத்திக்கொள்ளலாம்

என்றுதான் எந்தச் சட்டத்திலும் இந்தப் provision -னைச் சேர்க்கிறோம். எல்லா சட்டமுன்வடிவுகளிலும் இது இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 24 வரை, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 24 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2009 ஆம் ஆண்டு தமிழ்நாடு திருமணங்கள் பதிவு செய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2009) நிறைவேற்றப்பெற வேண்டும்*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(அஉ) திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2009

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2009 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2009), மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"*2009 ஆம் ஆண்டு திருநெல்வேலி, அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2009)*@ *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.*"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.வி. சண்முகம்.

@ *30–6–2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.*

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS